உள்ளே

வியாபாரத்தில்
போகி ?

ELITE
MANAGEMENT CONSULTING SERVICES

# தொழில் மலர் – 4

## தை பிறந்தால் வழி பிறக்குமா ?

ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் நமக்கான வழி கிடைக்கும் என்று காத்திருந்தால் நம்முடைய வெற்றியும் காத்துக்கொண்டே இருக்கும். எவ்வளவு வேகமாக நாம் வெற்றி அடைய விரும்புகிறோமோ அதை விட அதிகமாக நம்முடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும்.
தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற உங்கள் நம்பிக்கையில் தவறு இல்லை ஒரு வேளை உங்களுக்கு தை பிறந்த பின்பும் வழி கிடைக்காவிட்டால் அதற்கான தெளிவான வழிமுறைகளை பெற நம் Elite Management Consulting Services-னை தொடர்பு கொள்ளுங்கள்.
வழி பிறக்கும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். நாங்கள் உங்களை அழைத்துச் செல்கிறோம் வெற்றியை நோக்கி...

**99406 00860**

## வியாபாரத்தின் ஆடுகளத்தில் தவிர்க்க வேண்டிய தவறுகள்

### நிர்வாகியின் தவறுகள்:



1. நிர்வாகியாக தினசரி கடமைகளை புரிந்து கொள்ளாமல் இருப்பது.
2. நிர்வாகியாக தனக்கான கடமைகளை சரியாக செயல்படுத்தாமல் இருப்பது.
3. நிர்வாகியாக தன்னுடைய சுய விருப்பு வெறுப்புகளை நிறுவனத்தில் வெளிப்படுத்துவது.
4. தன்னுடைய நேரத்தின் மதிப்பை விட நிறுவனத்தின் மதிப்பு அதிகம் என்பதை உணராமல் இருப்பது.
5. தொலைநோக்கு பார்வையின்றி செய்ய வேண்டிய காரியங்களை தள்ளிப்போடுவது.

### நிர்வாகத்தின் தவறுகள்:



1. அனைவருக்குமான வரைமுறைகளை சமமாக வகுக்காமல் இருப்பது.
2. நிறுவனத்தின் தினசரி தேவைகளை வகுக்காமல் இருப்பது.
3. தினசரி தேவைகளை சரிசெய்ய அதற்கான பிரதிநிதிகளை நியமிக்காமல் இருப்பது.
4. நியமிக்கும் பிரதிநிதிகளின் செயல்பாடுகளை வெளிபடுத்தும் ஆவணங்கள் இல்லாமல் இருப்பது.
5. நிர்வாகத்தையும் நிறுவனத்தையும் இணைக்கும் மேலாண்மை நிறுவாமல் இருப்பது.

### உற்பத்தி தவறுகள்:



1. விற்பனைக்கு ஏற்ப உற்பத்தியை தீர்மானிக்காமல் இருப்பது.
2. உற்பத்தியின் வேகத்தின் கூடவே தரத்தையும் தீர்மானிக்க மறப்பது.
3. வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை மேம்படுத்த மறப்பது.
4. எதிர்கால திட்டமிடல் இல்லாமல் உற்பத்தியை கையாளுவது.
5. உற்பத்தியின் போது வீணாகும் பொருட்களின் மீது கவனம் செலுத்த தவறுவது.

Elite Management Consulting Services

## விற்பனை தவறுகள்:



1. வாடிக்கையாளரின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை மதிப்பிடாமல் இருப்பது.
2. சந்தையில் நம்முடைய விற்பனை என்ன நிலையில் இருக்கிறது என்பதை கவனிக்க தவறுவது.
3. வாடிக்கையாளரின் மதிப்பினை அறியாமல் விற்பனையை மட்டுமே முன்னெடுப்பது.
4. பணியாளர்களின் அணுகுமுறைகளை நெறிபடுத்தாமல் இருப்பது.
5. ஒருமுறை வரும் வாடிக்கையாளர்களை நம் நிறுவனத்தின் பிரதிநிதியாக மாற்ற தவறுவது.

## சமுதாய தவறுகள்:



1. நம் நிறுவனமும் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதை உணராமல் இருப்பது.
2. நம் நிறுவனத்திற்கு ஏற்ப சமூக கடமைகளில் அக்கறை காட்டாமல் இருப்பது.
3. சமூக அக்கறை கொண்டவர்களை அங்கீகாரம் செய்ய மறப்பது.
4. சமூக நடவடிக்கைகளை கண்டும் காணாமல் கடந்து செல்வது.
5. சமூகத்தின் அங்கமாக விளங்கும் மக்கள் தான் நம் வாடிக்கையாளர்கள் என்பதை உணராமல் இருப்பது.

## கூட்டணி தவறுகள்:

1. சுய இலாபத்திற்காக மட்டுமே சிறிய ஆசைகளுடன் கூட்டணி வைப்பது.
2. தனக்கு மேல் உள்ள வளர்ந்தவர்களோடு மட்டுமே கூட்டணி அமைப்பது.
3. அனைத்து தரப்புகளிலும் தொடர்புகளை ஏற்படுத்த தவறுவது.
4. கூட்டணியில் இருந்தாலும் வெளிப்படையாக இருக்க தவறுவது.
5. கூட்டணியில் இருப்பவர்களை அங்கீகாரம் செய்ய தவறுவது.



## சேவையின் தவறுகள்:



1. நம்முடைய தேவைகளை சார்ந்து மட்டுமே சேவை வழங்குவது.
2. வாடிக்கையாளரின் தேவைகளை நிராகரிப்பது.
3. நம்முடைய நேரத்தை காரணம் காட்டி வாடிக்கையாளரின் நேரத்தை வீணடிப்பது.
4. நம்முடைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப வாடிக்கையாளரின் விருப்பத்தை மாற்ற நினைப்பது.
5. செயல்பாடுகளில் முரண்பாடாக நடந்துகொள்வது.

## வியாபாரத்தில் போகி ?

பெரும்பாலும் பல வருடங்களாக செயல்பட்டு வரும் நிறுவனத்தின் உறுப்பினர்கள் வெளியுலக புதுமையை ஏற்பதும் அப்படியே ஏற்றாலும் அதனை செயல்படுத்துவது என்பது புளியங்கொம்பாக இருக்கும்.

சரி எதற்காக இந்த போகியை நாம் நிறுவனத்தில் கொண்டாட வேண்டும்?

1. பண்டிகைகள் அனைத்தும் முதல் நோக்கமாக சக மனிதர்களை இனைப்பதே முதல் நோக்கம்.

2. அப்படி அனைவரும் இணைந்தால் ஒருவர் மற்றவர் இடையே குறைநிறைகள் மறையும்.

3. விதை அப்படியே இருந்தால் மக்கிபோய்விடும். மரம் அப்படியே இருந்தால் பட்டு போகும். நாம் அப்படியே இருந்தால் என்ன ஆவோம் என்பதே நீங்களே முடிவு செய்யுங்கள்.

4. எது ஒன்றை பெற வேண்டும் என்றாலும் நாம் அதற்காக தயார் ஆக வேண்டும். அப்படி தயார் ஆவதுதான் போகி, வருடம் ஒரு முறையாவது அனைத்தையும் சுத்தம் செய்யும் போது புத்துணர்ச்சி ஏற்பட்டு விடும்.

5. இந்த வருட துவக்கத்தில் நமக்கு ஏற்படும் புதுமை, வருடம் முழுவதும் பயணிக்கும். இது மனதிற்கும் பொருந்தும்.

பக்கத்து ஊருக்கு போயிட்டு வந்தா மனதிற்கு சுறுசுறுப்பாக இருப்பதை போல புது புது எண்ணங்கள் எப்போதும் ஆனந்தமாக வைத்திருக்கும்.

### அதற்கு என்ன செய்யலாம் !

1. நிறுவனத்தில் அனைவரையும் பண்டிகையில் ஈடுபடுத்துங்கள்.
2. பண்டிகையில் பங்கேற்கும் அனைவரையும் மகிழ்ச்சி படுத்துங்கள்.
3. நிறுவனத்தின் உறுப்பினர்கள் மட்டும் இன்றி குடும்பத்தினரையும் அழைத்து வரச் செய்யுங்கள்.
4. உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் பங்களிப்பு நம்பிக்கையை வளர்க்கும்.
5. பண்டிகையின் போது ஏற்படும் மகிழ்ச்சியான தருணங்களை புகைப்படங்களாக நிறுவனத்தில் நிரப்புங்கள்.

Elite Management Consulting Services

## பொருளாதார தவறுகள்:



1. பணத்தை மட்டுமே பொருளாதாரமாக நினைப்பது.
2. செலவுகளை கட்டுப்படுத்துவதும் பொருளாதாரமே என்பதை உணராமல் இருப்பது.
3. யதார்த்தமான தேவைகளை விட அதிகமாக செலவுகள் செய்வது.
4. வருமானத்தை பற்றி சிந்திப்பதை விட செலவுகளை பற்றி அதிகமாக சிந்திப்பது.
5. சிக்கனம் என்று  கருதி வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு முதலீடு செய்யாமல் இருப்பது.

## மனிதவள தவறுகள்:



1. மனிதர்களை விலைமதிப்பற்ற வளமாக கணக்கிட தவறுவது.
2. தகுதியினையும் திறமையினையும் சரியாக கண்டறிய தவறுவது.
3. தகுதியானவர்களுக்கு தகுதியினை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு அளிக்காமல் இருப்பது.
4. ஒன்றை மட்டும் வைத்து மற்றவர்களை தகுதியானவர்கள் என்று நம்புவது.
5. தான் அறிந்து கொண்டதை மற்றவர்களும் அறிந்துகொள்ள வாய்ப்பு தராமல் இருப்பது.

## பயன்பாட்டுத் தவறுகள்:



1. பயன்படுத்த வேண்டிய நேரம், இடம், பொருள், மனிதர்கள் ஆகியவற்றை கண்டுகொள்ளாமல் இருப்பது.
2. நம்மிடம் இருக்கும் மனிதர்கள் மற்றும் பொருட்களின் மதிப்பினை உணர்ந்து பயன்படுத்த முன்வரும் மற்றவர்களை பயன்படுத்த விடாமல் தடுப்பது.
3. நமக்கான வளங்களை பயன்படுத்தவும், பாதுகாக்கவும் விதிமுறைகளை வகுக்காமல் இருப்பது.
4. நம் நிறுவனத்தின் நேரம், பொருட்கள், மனிதர்கள் ஆகியவற்றை தவறாக பயன்படுத்தும்   போது ஆரம்பத்திலேயே எச்சரிக்காமல் இருப்பது.
5. அனைத்து வளங்களும் முறையாக பயன்படுத்தப்பட்டாலும் தற்காலத்திற்கு ஏற்ப நவீன படுத்தாமல் இருப்பது.

Elite Management Consulting Services

## பகிர்ந்தளிக்கும் தவறுகள்:



1. பொறுப்புகளை ஏற்க இருப்பவர்களிடம் அதனை கொடுக்கத் தவறுவது.
2. சாதகமான வார்த்தைகள் உடைய மனிதர்களை நம்பி பொறுப்புகளை தருவது.
3. சிறப்பாக செயல்படுபவர்களை அதிகமாக பயன்படுத்தி அதிருப்தி அடைய செய்வது.
4. சிறப்பாக பொறுப்புகளை ஏற்று செயல்படுகின்றவர்களை அங்கீகாரம் செய்ய தவறுவது.
5. நேரத்திற்கு ஏற்றவாறு பொறுப்புகளை பகிர்ந்து கொடுக்காமல் தானே ஏற்றுக்கொண்டு தடைகளை ஏற்படுத்துவது.

அடடே!

"என்னதான் பொங்கல் பானையை அழகாய் தயார் செய்தாலும் அடுப்பில் வெந்தால் தான் சுவையான பொங்கல் கிடைக்கும்"

## பங்களிக்கும் தவறுகள்:



1. முடிக்க வேண்டிய வேலைகளின் கூடவே அதற்கான தேவைகளையும் தர மறப்பது.
2. நம்முடைய தேவைகளை கடந்து மற்றவர்களுடைய மகிழ்ச்சியில் பங்கெடுக்க மறுப்பது.
3. உரிமைகளை பெற துடிக்கும் அதே நேரத்தில் கடமைகளில் பங்கேற்க தவறுவது.
4. சரியான முறையில் பங்கேற்கும் மற்றவர்களை அங்கீகாரம் செய்ய மறுப்பது.
5. நம் பங்களிப்புதான் நம்மை தொடர்ந்து கற்றுக்கொள்ள உதவும் என்பதை புரியாமல் இருப்பது.

## உளவியல் தவறுகள்:

1. நமக்குள் இருக்கும் உலக அறிவை வைத்து மட்டுமே வெளியுலகை தீர்மானிப்பது.
2. நிறுவனத்தின் வளர்ச்சியில் பணியாளர்களின் பண்புகள் மிகவும் முக்கியமானது என்பதை மறப்பது.
3. பணியாளர்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்தாமல் வேலையில் மட்டும் உற்சாகத்தை எதிர்பார்ப்பது.
4. தடைகளை தகர்த்தெறிய ஊக்கப்படுத்தாமல் பணியாளர்களை காயப்படுத்துவது.
5. நிறுவனத்தின் பணநிறைவு ஒட்டுமொத்த பணியாளர்களின் மனநிறைவின் ஆதாரமே என்பதை உணராமல் இருப்பது.



## உடலியல் தவறுகள்:



1. நேரத்தையும் வேலையையும் காரணம் காட்டி உணவை தவிர்ப்பது.
2. உடல் நிலை மற்றும் உடல் அமைப்பிற்கு ஏற்ப வேலைகளை தீர்மானிக்க தவறுவது.
3. சமமான திறமைகளை வெளிப்படுத்த சமமான உடல்நலம் யாருக்கும் இல்லை என்பதை கவனிக்க தவறுவது.
4. உடல் நலத்தின் அங்கமாக இருக்கும் தூய்மையான காற்று, நீர், இடம், உணவு, ஆகியவற்றை ஏற்படுத்த தவறுவது.
5. மனிதனின் உடலில் இருப்பது உறுப்புகளான இல்லாமல் இயந்திரங்களாக கருதுவது.

Elite Management Consulting

## வாழ்வியல் தவறுகள்:

1. குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் பணிகளை தொடர்வது.
2. அலுவலகம் மற்றும் நமக்கான நேரத்தை தீர்மானிக்காமல் இருப்பது.
3. அலுவலகத்தில் இல்லத்தையும் இல்லத்தில் அலுவலகத்தினையும் இணைத்துக் கொள்வது.
4. வாழ்க்கை முறைக்கு ஏற்ப தொழில்முறையை மாற்றாமல் தொழில்முறைக்கு ஏற்ப வாழ்க்கை முறையை மாற்றுவது.
5. தொழில் மற்றும் வாழ்க்கை இரண்டையும் சரியாக பராமரிக்காமல் இரண்டிலும் பாதிக்கப்படுவது.

